# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

O.S.No.18/2023

**CNR.No.TNCB19000**

Date,07.04.2025 PW1

| **பெயர்** | தங்கராஜ் | **வயது** | 40 |
|---|---|---|---|
| த/பெ | கரியப்பன் | **வட்டம்** | |
| விலாசம் | மேட்டுப்பாளையம் | **மாவட்டம்** | மேட்டுப்பாளையம் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 7nd April 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1997 ம் ஆண்டு வரைக்கும் தாவா சொத்தில் ரங்கசாமிதான் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை விவசாயம் செய்து வருகிறோம் என்றால் 15, 20 வருடங்களாக எனக்கு நினைவு தெரிந்தது முதல் விவசாயம் செய்து வருகிறோம். அதற்கு முன்பு எனது அப்பா அம்மா செய்து வந்தார்கள். எனது அப்பா அம்மா எவ்வளவு காலமாக விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் 15, 20 வருடமாக விவசாயம் செய்து வருகிறார்கள். நான் பிறப்பதற்கு முன்பு இருந்தே விவசாயம் செய்கிறார்கள். கம்பு , சோளம் கடலை ஆகியவை செய்து வந்தார்கள். எனது அப்பா அம்மா விவசாயம் செய்து வந்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன்.

அந்த ஆவணங்கள் எந்த வருடத்திற்கானது என்றால் சிட்டா கொடுத்திருக்கிறேன். எந்த வருடம் என்று நினைவில்லை. எந்த காலத்திலும் எனது அப்பா அம்மா விவசாயம் செய்யவில்லை என்றும் அதற்கான எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றும் தற்போது தாக்கல்

செய்திருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1997 க்கு பின்னிட்டு 2020 ரங்கசாமி இறக்கும் வரை எனது தாயாரோ அவரது சகோதரிகளோ பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அவர்களுக்கு தெரியவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. ரங்கசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று அவர்களுக்கு தெரிந்ததால் தான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கெம்பியம்மாளுக்கோ ராஜம்மாளுக்கோ எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கே உரிமையில்லாத சொத்தில் நான் உரிமைகோர எனக்கு தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6-ம் பிரதிவாதி புவனேஷ்வரி என்பவர் ரங்கசாமியின் மகள் என்றால் சரிதான். 1997 ம் தாவா சொத்தினை ரங்கசாமி ராமசாமிக்கு கொடுக்கும்பொழுது 6-ம்பிரதிவாதி பிறக்கவில்லை என்றால் சரியல்ல. 1 வயது குழந்தையாக இருந்தது. அதற்கான பிறப்புசான்றிதழ் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. 6-ம் பிரதிவாதி அப்போது பிறக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி ரங்கசாமியின் மனைவி என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதியின் ரங்கசாமியின் மகன் மற்றும் மகள்என்றால் மூன்றுமே மகள்கள். ரங்கசாமி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர் உயிருடன் இருக்கும்போதே ராமசாமிக்கு கொடுத்து விட்டதால் 1 முதல் 6 பிரதிவாதிகள் மற்றும் வாதிகள் தாவா சொத்தில் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல.

தாவா சொத்தில் ரங்கசாமிக்கு பிறகு ராமசாமியும் ராமசாமிக்கு பிறகு 8, 9 பிரதிவாதிகளும் தாவா சொத்தை அடைந்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எந்தவித உரிமையும் இல்லை என்ற விபரம் தெரிந்தும் தாவா சொத்தின் மதிப்பு அதிகமானதால் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான சங்கதிகளுடன் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லாததால் தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.